நேரம் மின்சாரம் பகல் நேரங்களில் கொடுத்தால்தான் பல இடங்களில கிணற்றுப் பாசனத்தைச் செய்ய முடியும். எனவே, அமைச்சர் அவர்கள் கொஞ்சம கருணை வைத்து பகல நேரத்தில் மட்டும் விவசாயத்திற்கு 8 மணி நேரத்துறகு குறையாமல் மின்சாரம் கொடுக்கப்படும் என்று அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : துணைத் தலைவர் அவர்களே, மாணபுமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த பருத்தி போன்ற பயிர்களுக்கு பகல் நேரத்தில் நாம் கொடுக்கிற 6 மணி நேரம் மின்சாரத்திலே நிச்சயமாகத் தண்ணீரைப் பயன் படுத்திக் கொள்ள முடியும். இருந்தாலும் இப்போது ஓரளவிற்கு மின்வெட்டு தளர்த்தப்பட்டிருக்கிற காரணத்தால், மின்சார வெட்டு தளர்த்தப்பட்டுள்ள காலங்களில் இன்னும் இரண்டு மணி நேரம் விவசாயத்திற்குக் கூடுதலாக மின்சாரம் கொடுக்க முடியுமா என்பதைப் பற்றி இந்த அரசு பரிசீலிக்கும்.

திருமதி ரமணி நல்லதம்பி: துணைத் தலைவர் அவர்களே..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்னும் 10 வினாக்களுக்கு மேல் இருக்கின்றன. அடுத்த வினாவில் கேட்க அனுமதிக்கிறேன். உட்காருங்கள்.

சப்-ஸ்டேசன் கட்டுதல்.

*2342—**திரு. செ. பெருமாள்:**

மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஏற்காடு தொகுதியைச் சேர்ந்த கல்ராயன் மலையில் தும்பல் இடையப்பட்டி கிராமத்தை மையமாகக் கொண்டு சப்-ஸ்டேசன் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஆம்.

திருமதி ரமணி நல்லதம்பி ; பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் மின்சாரம் வழங்குகிற முறைகளை, இரவிலா, பகலிலா என்பதைப்பற்றிச் சொன்னார்கள். இரவில் விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்குவதைக்கூட மன்னித்து விடலாம். ஆனால் கரண்ட் ஒரு யூனிட் கூட உபயோகிக்காத

1990 சனவரி, 27]

வர்களுக்கு எல்லாம் கட்டணம் வசூலிக்கிறார்கள். அப்படி ஓடாத மோட்டார்களுக்கு கட்டணம் வசூலிக்கிற முறை இருந்து வருகிறது. அந்த நிலையில் ஏன் அந்த இணைப்புகளை வரிசைப் படுத்தி, கட்டுப்படுத்திச் செய்ய வேண்டும்? எல்லோருக்கும் கொடுத்துவிட்டு, மோட்டார் ஓடினாலும் ஓடாவிட்டாலும் கட்டணம் என்று வைத்துவிடலாம் அல்லவா?

மாண்புமிகு திரு. ஆற்காடு வீராசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்சார இணைப்பு கொடுக்கிற நேரத்திலே ஒரு ஹார்ஸ் பவருக்கு இவ்வளவு என்று நிர்ணயித்து இருக்கிறார்கள். அந்த மின்சார பம்பு செட்டுகளை ஓட்டு கிறார்களா, இல்லையா என்பது இல்லை. அப்படி அவர்களுக்கு மின்சார பம்ப் செட்டுகளை ஓட்ட வேண்டிய அவசியம் இல்லையென்று தெரிந்தால், மின்சார இலாக்காவிற்கு எழுதிக் கொடுத்து விட்டால், அந்தக் காலத்திற்கு வேண்டுமானால் அரசு மின்சாரக் கட்டணத்தை வசூல் செய்யாமல் பார்த்துக் கொள்ளலாம். ஆனால் எந்த விவசாயிகளும் அப்படி எழுதிக் கொடுக்க மாட்டார்கள். 6 மாதம் தண்ணீர் இல்லையென்றாலும், மறுபடியும் 6 மாத காலத்திற்குப் பிறகு தண்ணீர் வந்தால் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று கருதுகிறார்கள். எனவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒவ்வொருவருக்கும் ஒரு தனி விதிவிலக்கு கொடுக்க முடியாது.

திரு. இளம்வழுதி : துணைத் தலைவர் அவர்களே, 111-ம் எண்ணுள்ள கேள்வியில் ஏற்காடு தொகுதியைச் சேர்ந்த கல்ராயன் மலை என்று இருக்கிறது. எனக்குத் தெரிந்த வரையில் அது சேர்வராயன்மலை என்று இருக்கவேண்டும் என்று கருதுகிறேன். அது சரியா என்று அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்கக் கோருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: துணைத் தலைவர் அவர்களே, சின்னக்கல்ராயன்மலை என்று ஒன்று இருக்கிறது. அதற்குப் பக்கத்தில் கும்பல் வெள்ளாளப்பட்டி, இடையப்பட்டி ஆகிய கிராமங்களுக்கு வாழப்பாடி அருகில் சிங்கபுரம் 110/22 கே. வி. துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் சின்னக்கல்ராயன் மின்னோட்டி மூலமாக வழங்கப்பட்டு வருகிறது. இப்போது அங்கே தனியாக ஒரு துணை மின்நிலையம் அமைக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. வெள்ளாளப்பட்டியில் எட்டாவது ஐந்தாண்டுத்திட்டக் காலத்தில் 182 லட்சத்து 57 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு துணை மின் நிலையம் அமைக்கப்படும். 1994-95-ம் ஆண்டில் அது செயல்படும்.

திரு. எம். முகமது சித்திக் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு விவசாயிகளுக்கு குதிரை சக்திக்கு 75 ரூபாய் என்று இருந்ததை 50 ரூபாயாகக் குறைத்துள்ளார்கள் இது 5 குதிரை சக்திகள் வரையிலும்தான் வழங்கப்படுகிறது. 5 குதிரை சக்திக்கு அதிகமாக உள்ள மின் மோட்டார்களுக்கும் விவசாயிகளுக்கும் இந்தக் குறைந்த கட்டணம் வசூல் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: துணைத் தலைவர் அவர்களே, இப்போது நம்முடைய அரசு விவசாயிகளுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிற மின் கட்டணச் சலுகையால், குறைந்த கட்டணம் வசூலிக்கிற காரணத்தால், ஆண்டு ஒன்றுக்கு 360 கோடி ரூபாய் அரசுக்கு இழப்பு ஏற்படுகிறது.

10-20 மணி

இதைச் சரிக்கட்டுவதற்கே நமது முதலமைச்சர் அவர்கள் பெரிதும் சிரமப்படுகிறார்கள். அந்தச் சூழ்நிலையிலே மேலும் 5 ஹார்ஸ் பவருக்கு மேலே வைத்திருக்கக்கூடியவர்களுக்கு மின் கட்டணத்தைக் குறைக்கக்கூடிய செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. செ. பெருமாள் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் சப்-ஸ்டேஷன் கட்டுவதற்கு அரசு முன்வந்ததற்கு நன்றி சொல்லி, இது மிக விரைவில் செயல்பட அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : துணைத் தலைவர் அவர்களே, இதை ஏற்றுக்கொண்டுதான் 188 லட்சத்து 57 ஆயிரம் ரூபாய் செலவிலே மதிப்பீடு செய்யப்பட்டு வேலைகள் தொடங்குவதற்கான எல்லா முயற்சிகளும் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. எந்த அளவிற்கு வேகமாகச் செய்ய முடியுமோ, அந்த அளவிற்கு வேகமாகச் செய்து முடிக்கப்படும்.

மோர்தனா அணைக் கட்டும் திட்டம்.

*1374—**திரு. கே. ஆர். சுந்தரம் :**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வட ஆற்காடு டாக்டர் அம்பேத்கார் மாவட்டம், குடியாத்தம் தொகுதியில், மோர்தனா அணை கட்டும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், குடியாத்தம் அருகில் மோர்தனா கிராமத்தருகில் கௌண்டியா நதியின் குறுக்கே ஒரு அணைக்கட்டு அமைப்பதற்கான திட்ட அறிக்கை அரசின் ஆய்வில் உள்ளது.